பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
21 10 2024 **MONDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- நாடு முழுவதும் 6 லட்சத்து 26 ஆயிரம் கிராமங்களின் நில ஆவணங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

- அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் நாள்தோறும் 60 ஆயிரம் முதல் 90 ஆயிரம் பேர் பதிவு செய்துவருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி தீவிர புயலாக, ஒடிஷாவின் பூரி – மேற்கு வங்கத்தின் சாகர் தீவுகளுக்கு இடையே வரும் வெள்ளிக்கிழமை அதிகாலை கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- தமிழக – தில்லி அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<<<>>>>>

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி, வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவையும் திரு நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் 6 லட்சத்து 26 ஆயிரம் கிராமங்களின் நில ஆவணங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நில ஆய்விற்கான நவீன தொழில்நுட்பம் குறித்த சர்வதேச கருத்தரங்கை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

விவசாயிகளின் நிலங்களை ஆவணப்படுத்துவதற்கென 5 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் நாள்தோறும் 60 ஆயிரம் முதல் 90 ஆயிரம் பேர் பதிவு செய்துவருவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், இந்த இணையதளத்தின் புதிய வசதியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அமைப்புசாரா தொழிலாளர்கள் இந்த இணையதளத்தில் பதிவு செய்து தங்களுக்கான நலத்திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

பிரதமரின் மக்கள் மருந்தகத்தின் விற்பனை ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த மருந்தகங்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இது வெளிப்படுத்துவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் இந்த மருந்தகங்களின் எண்ணிக்கை 170 மடங்கு அதிகரித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2014-ஆம் ஆண்டு 80 மருந்தகங்கள் மட்டுமே இருந்த நிலையில் தற்போது இதன் எண்ணிக்கை 14 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டாண்டுகளுக்குள் 25 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

லடாக்கையொட்டிய எல்லைப்பகுதியில், கண்காணிப்புப்பணிகளை மேற்கொள்வது தொடர்பான ஒப்பந்தம் இந்தியா – சீனா இடையே இறுதி செய்யப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, விரிவான பேச்சுக்களுக்கு பிறகு இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சீனா உடனான பேச்சுவார்த்தை தொடரும் என்றும் திரு விக்ரம் மிஸ்ரி கூறினார்.

<<<<<<>>>>>

ஐ நா பாதுகாப்புக்குழுவில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என்று பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

பிரிட்டன் முன்னாள் பிரதமர் திரு டேவிட் கேமரூனும், இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

சர்வதேச சவால்களை உறுதியுடன் எதிர்கொள்வதற்கு இந்த நடவடிக்கை வலுசேர்க்கும் என்று அவர் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐ நா பாதுகாப்புக்குழுவில் சீர்திருத்த நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு டேவிட் கேமரூன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை ஐக்கிய ஜனதாதள் கட்சியும், சிராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜன்சக்தி கட்சியும் வெளியிட்டுள்ளன.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் ஐக்கிய ஜனதாள் கட்சிக்கு இரண்டு தொகுதிகளும், லோக் ஜன்சக்தி கட்சிக்கு ஒரு தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஐக்கிய ஜனதாதள் கட்சி சார்பில், மேற்கு ஜம்ஷெட்பூர் தொகுதியில் சரயூ ராயும், Tamar தெதாகுதியில் Raja Pitar-யும் போட்டியிடுகின்றனர்.

Chatra தொகுதியிலிருந்து லோக் ஜன்சக்தி கட்சி சார்பில் ஜனார்தன் பஸ்வான் போட்டியிடுகிறார்.

இதற்கிடையே, ஜார்கண்ட் காவல் தலைவராக திரு அஜய்குமார் சிங்கை, நியமிப்பதற்கு தேர்தல் ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

<<<<<<>>>>>

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை ரஷ்யா புறப்பட்டு செல்கிறார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, இந்த உச்சிமாநாடு Kazan–னில் நடைபெறவுள்ளதாக கூறினார்.

பொருளாதார ஒத்துழைப்பு, உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறையில் ஒருங்கிணைந்து செயல்படுவது போன்ற நடவடிக்கைகள் குறித்து இந்த உச்சிமாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடியின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக Kazan–னில் மருத்துவம் பயிலும் மாணவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மாணவர் - 37 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தீவிர புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எமது செய்தியாளரிடம் பேசிய சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன், இது ஒடிஷா மாநிலம் பூரி — மேற்குவங்கம் சாகர் தீவுகளுக்கு இடையே கரையைக் கடக்ககூடும் என்று தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 47 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, புயலை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒடிஷா அரசு மேற்கொண்டு வருகிறது.

கடலோரப்பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

புயல் நிவாரண மையங்கள் திறக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மையங்களில் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

புவனேஷ்வரில் உள்ள சிறப்பு நிவாரண ஆணையர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையும் திறக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையினர், பாதிக்கப்படக்கூடிய இடங்களுக்கு செல்லும் வகையில், தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு சென்ற மீனவர்கள் நாளைக்குள் கரைக்கு திரும்புமாறு ஒடிஷா அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த புயல் தொடர்பாக, மத்திய அமைச்சரவைச்செயலர், ஒடிஷா தலைமைச்செயலரை தொடர்புகொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த புயல் கரையை கடப்பதையடுத்து, ஒடிஷா கடலோர பகுதிகளில் நாளை மறுநாள் தொடங்கி, வரும் வெள்ளிக்கிழமை வரை அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தில்லியில் காற்று மாசுபடுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு கோபால் ராய் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காற்று மாசுபடுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக குறிப்பிட்டார்.

அண்டை மாநிலங்களான ஹரியானா மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகியவை தில்லி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த இரண்டு மாநிலங்களில் இருந்து டீசலில் இயங்கும் பேருந்துகள் தில்லி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

தில்லியை பொறுத்தவரை இயற்கை எரிவாயு மூலம் மட்டுமே பேருந்துகள் இயக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

காற்று மாசினை தடுப்பதற்கு உதவிடும் வகையில் டீசல் பேருந்து இயக்கத்தை இரு மாநிலங்களும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் திரு கோபால் ராய் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழக – தில்லி அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று, 8 விக்கெட் இழப்பிற்கு 264 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய தில்லி அணி, 266 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனைத்தொடர்ந்து, பாலோ ஆனை பெற்று இரண்டாவது இன்னிங்சை ஆடிய தில்லி அணி, ஆட்டநேர இறுதியில் 8 விக்கெட் இழப்பிற்கு, 193 ரன் எடுத்தது.

தமிழக அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு, 674 ரன் எடுத்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

-------------

வளரும் அணிகளுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா "ஏ" அணி - ஐக்கிய அரபு எமிரேட் இடையேயான ஆட்டம் சற்றுமுன் தொடங்கியது.

ஓமனில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற ஐக்கிய அரபு எமிரேட் அணி முதலில் பேட் செய்து வருகிறது.

<<<<<<END>>>>>